**ஜூலை – 31**

# TNPSC துளிகள்

- 65 நகரங்களில் போக்குவரத்து செயல்பாடுகளுக்காகவும் 8 மாநிலப் போக்குவரத்துத் துறை நிறுவனங்களுக்காக நகரங்களுக்கிடையேயான போக்குவரத்துச் செயல்பாடுகளுக்காகவும் 5645 மின்சாரப் பேருந்துகளுக்கான அனுமதியை அமைச்சகங்களுக்கிடையேயான ஒரு குழுவானது ஒப்புதல் வழங்கியுள்ளது என்று நிதி ஆயோக்கின் தலைமை நிர்வாக அதிகாரியான அமிதாப் காந்த் அறிவித்துள்ளார்.
- 1984 ஆம் ஆண்டு பிரிவைச் சேர்ந்த இந்திய ஆட்சிப் பணி அதிகாரியான ராஜிவ் குமார் மத்திய நிதித் துறையின் புதிய செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- அமெரிக்காவின் மாசாசுசெட்சில் காம்பிரிட்ஜில் உள்ள ஹார்வர்டு மைக்ரோபோட்டிக்ஸ் ஆய்வகமானது நீடித்த வகையில் ஒரு இணைக்கப்படாத விமானமான "ரோபோபீ எக்ஸ்-விங்" என்ற இலகுவான, பூச்சி அளவிலான ஒரு வான்வழி வாகனத்தைத் தயாரித்துள்ளது. இது ஒரு பூச்சியைப் போலவே ஒரு வினாடிக்கு 120 முறை இறக்கைகளை மடக்குகின்றது.
  - இயற்கைத் தேர்வின் இயந்திர அடிப்படையைப் புரிந்து கொள்ளுதல் மற்றும் சுற்றுச்சூழல் கண்காணிப்பு ஆகியவை இதன் நடைமுறைப் பயன்பாடுகளில் அடங்கும்.
- உலகின் பரபரப்பான எண்ணெய்ப் போக்குவரத்துப் பாதையான ஹார்முஸ் ஜலசந்தி வழியாகச் செல்லும் சரக்குக் கப்பல்களுக்கு ஐரோப்பா தலைமையிலான படை பாதுகாப்பு அளிக்கத் திட்டமிட்டுள்ளதாக பிரிட்டன் அறிவித்துள்ளது.
  - ஈரானின் இஸ்லாமியப் புரட்சிகரப் படையால் ஜூலை 19 அன்று இங்கிலாந்து கொடியிடப்பட்ட கப்பலான ஸ்டெனோ இம்பெரோவைக் கைப்பற்றியதற்கு பதிலடியாக இவ்வாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

# தேசியச் செய்திகள்

## ஐஎன் எல்சியூ எல்-56 கப்பல்

- ஐஎன் எல்சியூ எல்-56 (IN LCU L56) என்ற கப்பலானது, கடற்படைத் துணைத் தளபதியான அதுல் குமார் ஜெயின் என்பவரால் இந்தியக் கடற்படையில் இணைக்கப்பட்டது.
- LCU 56 என்பது நீரிலும் நிலத்திலும் இயக்கக்கூடிய ஒரு கப்பலாகும். இது முக்கியமான போர்ப் பீரங்கிகளின் போக்குவரத்து மற்றும் மற்ற பகுதிகளில் அவற்றை நிலை நிறுத்துதல், ஆயுதம் தாங்கிய வாகனங்கள், துருப்புகள் மற்றும் உபகரணங்களை கப்பலில் இருந்து கரைக்குக் கொண்டு வருதல் ஆகியவற்றில் முக்கியப் பங்கு வகிக்கின்றது.
- இது அந்தமான் நிக்கோபார் பிரிவின் (ANC – Andaman Nicobar Command) நாவக் (NAVCC) என்ற பிரிவின் கீழ் நிர்வகிக்கப் படுகின்றது. இது போர்ட் ப்ளேயரை அடிப்படையாகக் கொண்டுச் செயல்படுகின்றது.
- இது கார்டன் ரிச் கப்பல் கட்டுநர்கள் மற்றும் பொறியாளர்கள் நிறுவனத்தினால் கட்டமைக்கப்பட்ட 100-வது கப்பலாகும்.




## பதவியில் உள்ள உயர்நீதிமன்ற நீதிபதி – குற்றச் சாட்டு

- ஏறத்தாழ 30 ஆண்டுகளில் பதவியில் இருக்கும் நீதிபதி மீது குற்றம் சாட்டப்பட்டுள்ள முதலாவது நபராக தற்பொழுது பதவியிலுள்ள அலகாபாத் உயர் நீதிமன்ற நீதிபதி SN சுக்லா உருவெடுத்து உள்ளார்.
- இந்திய உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி ரஞ்சன் கோகாய் நீதிபதி சுக்லாவிற்கு எதிராக முதல் தகவல் அறிக்கையைப் பதிவு செய்ய சிபிஐக்கு அனுமதி வழங்கியுள்ளார்.
- 1991 ஆம் ஆண்டில் K. வீராசாமி (எதிர்) மத்திய அரசு என்ற புகழ்பெற்ற வழக்கில் வழங்கப் பட்ட உச்ச நீதிமன்றத் தீர்ப்புக்குப் பிறகு வரும் முதலாவது வழக்கு இதுவாகும்.

### *K. வீராசாமி வழக்கு*

- இந்த வழக்கில், உயர் நீதிமன்றங்களின் அனைத்து நீதிபதிகள் மற்றும் உச்ச நீதிமன்றத்தின் நீதிபதிகளுக்கு எதிராக முதல் தகவல் அறிக்கையைப் பதிவு செய்வதற்குக் கூட உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதியின் அனுமதியைக் கட்டாயம் பெற வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
- வழக்கு விசாரணைக்கு ஒப்புதல் வழங்கும் அதிகாரம் இந்தியக் குடியரசுத் தலைவரிடம் இருக்கின்றது.
- ஆனால் உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியினால் வழங்கப்பட்ட அறிவுரையின் படியே இந்தியக் குடியரசுத் தலைவர் செயல்படுவதற்கான நடைமுறைகளை உச்ச நீதிமன்றம் வழங்கியுள்ளது.

## வக்ஃபு வாரியம் – ஓய்வு பெற்ற நீதிபதி சாகியுல்லா கான் குழு

- மத்திய சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் முக்தர் அப்பாஸ் நக்வி மத்திய வக்ஃபு ஆணையத்தின் தேசியக் கருத்தரங்கை புது தில்லியில் தொடங்கி வைத்தார்.
- தற்பொழுதைய அரசின் முதல் 100 நாட்களில் நாடெங்கிலும் உள்ள வக்ஃபு வாரியச் சொத்துகளை 100 சதவிகிதம் டிஜிட்டல் மயமாக்குவதே மத்திய அரசின் இலக்கு என்று இவர் அறிவித்துள்ளார்.

- மேலும் ஓய்வு பெற்ற நீதிபதியான சாகியுல்லா கான் குழுவானது வக்ஃபு சொத்துகளை சிறப்பாகப் பயன்படுத்துவதற்கும் நிர்வகிப்பதற்கும் தனது அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளது.

*இதுபற்றி*

- வக்ஃபு என்பது பெருந்தன்மையுள்ள முஸ்லீம்களால் கடவுளின் பெயரில் தானமாக அர்ப்பணிக்கப்பட்ட ஒரு மிகப்பெரிய சொத்தாகும்.
- இந்தச் சொத்துகளினால் ஈட்டப்படும் வருமானம் ஏழைகளின் நலனுக்காகப் பிரத்தியேகமாகப் பயன்படுத்தப் படவிருக்கின்றது.

## முறைப்படுத்தப்படாத வைப்பு நிதித் திட்டங்கள் மீதான தடை

- முறைப்படுத்தப்படாத வைப்பு நிதித் திட்டங்கள் மீதான தடை மசோதா, 2019 ஆனது நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் நிறைவேற்றப்பட்டது.
- வைப்பு நிதியைப் பெறும் திட்டமானது பின்வருபவையாக இருப்பின் அவை “முறைப்படுத்தப்படாதது” என்று வரையறுக்கப்பட்டுள்ளது.
    - இந்த நிதி வணிக நோக்கத்திற்காகப் பெறப்பட்டால்
    - இந்த நிதி மசோதாவில் உள்ள பட்டியலிடப்பட்டுள்ள ஒழுங்குமுறை அமைப்புகளிடம் பதிவு செய்யப்படாமல் இருப்பின்
- மாநில / மத்திய அரசுச் செயலாளர் தகுதி நிலைக்குக் கீழ் இல்லாத ஒரு தகுதி வாய்ந்த அதிகாரி இது போன்ற திட்டங்களை ஒழுங்குபடுத்துவதற்காக அரசு அதிகாரிகளாக நியமிக்கப்பட விருக்கின்றனர்.
- இது வைப்பு நிதியைப் பெறும் அனைவரையும் உள்ளடக்கிய ஒரு மையப்படுத்தப்பட்ட தரவுத் தளத்தை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது தொடர்பாக எந்தவொரு குற்றங்கள் தொடர்பான வழக்குகளையும் அதற்கென பிரத்தியேகமாக ஏற்படுத்தப்பட்ட நீதிமன்றங்கள் விசாரிக்கும்.

## உரத் துறைக்கான பசுமைத் தரக் குறியீடு

- மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சர் பிரகாஷ் ஜவ்டேகர் “தானியங்களினால் தானியம்” என்ற உரத் துறை மீதான பசுமைத் தரக் குறியீட்டின் சமீபத்திய அறிக்கையை புது தில்லியில் வெளியிட்டார்.
- இந்தப் பசுமைத் தரக் குறியீடானது புதுதில்லியில் உள்ள அறிவியல் மற்றும் சுற்றுச்சூழல் மையத்தினால் (CSE – Centre for Science and Environment) மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- நேர்மறைகள் : எரிசக்திப் பயன்பாடு மற்றும் பசுமை இல்ல வாயு உமிழ்வுகளில் இந்தியாவின் உரத் துறையானது உலகில் உள்ள துறைகளில் மிகச் சிறந்த ஒன்றாகும்.
- குறிப்பிடத்தக்கவை : நீர்ப் பயன்பாடு, நீர் மாசுபாடு மற்றும் தாவரங்கள் பாதுகாப்பு மீதான பதிவுகள்.
- முன்னணியில் உள்ள 3 தொழிற்சாலைகள்
    - உத்தரப் பிரதேசத்தின் ஜகதீஸ்பூரில் உள்ள இந்தோ கல்ப் உரங்கள் அலகு.

- குஜராத்தில் உள்ள KRIBHCO நிறுவனத்தின் ஹசிரா அலகு.
- கர்நாடகாவில் உள்ள மங்களூருவின் பனம்பூரில் உள்ள இரசாயனங்கள் மற்றும் உரங்களின் அலகு.

- 1980 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட CSE ஆனது இந்தியாவில் உள்ள சுற்றுச்சூழல் வளர்ச்சி குறித்த பிரச்சினைகள் மீதான ஒரு கொள்கை அமைப்பாக செயல்படுகின்றது.

## தேசிய சிறுபான்மையினர் ஆணையம்

- தேசிய சிறுபான்மையினர் ஆணையமானது புதிய குழுக்களை "சிறுபான்மையினர்களாக" அறிவிப்பதற்கான அதிகாரம் மத்திய அரசுக்கு மட்டுமே உள்ளது என்று கூறியுள்ளது.
- இந்துக்கள் பெரும்பான்மையாக இல்லாத மாநிலங்களில் இந்துக்களை "சிறுபான்மையினராக" அதிகாரப் பூர்வமாக அறிவிக்கக் கோரி உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் மீது இவ்வாறு பதிலளிக்கப்பட்டுள்ளது.

*இதுபற்றி*

- சிறுபான்மையினர் ஆணையம் ஒரு நிர்வாக ஆணையின் படி 1978 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது.
- 1992 ஆம் ஆண்டில் தேசிய சிறுபான்மையினர் ஆணையச் சட்டம் இயற்றப்பட்டதற்குப் பின்பு இது ஒரு சட்டப்பூர்வ அமைப்பாக உருவாகியது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்


## தானியங்கி வாகனங்களில் நுண்புள்ளித் தொழில்நுட்பம்

- மத்திய சாலைப் போக்குவரத்துத் துறை அமைச்சகம் மோட்டார் வாகனங்கள் மற்றும் அவற்றின் பாகங்களை நுண்புள்ளித் தொழில்நுட்பத்துடன் இணைக்க அனுமதிக்கும் வரைவு அறிவிக்கையை வெளியிட்டுள்ளது.
- நுண்புள்ளித் தொழில்நுட்பம் என்பது வாகனத்தின் அமைப்பையும் அதன் பாகங்களையும் நுண்புள்ளிகளால் தெளிக்கப்படுவதாகும். இது ஒரு தனித்துவமான அடையாளத்தை அளிக்கின்றது.
- வாகனத்திற்கு மட்டுமின்றி எந்தவொரு பாகத்திற்கும் சேதம் ஏற்படாமல் இதனை நீக்க முடியாது.
- இந்த கண்ணுக்குத் தெரியாத நுண் புள்ளிகளை நுண்ணோக்கியின் உதவியுடன் நேரடியாகப் படித்தறிய முடியும். இது புற ஊதா ஒளி ஆதாரத்தின் உதவியுடன் அடையாளம் காணப்படுகின்றது.
- இந்தத் தொழில்நுட்பமானது வாகனங்களின் திருட்டைக் கண்டுபிடிக்கவும் போலி உதிரி பாகங்கள் அதில் பயன்படுத்துதலைக் கண்டுபிடிக்கவும் உதவும்.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## செம்மண் (Red Mud) பயன்பாடு

- மத்திய சுரங்கத் துறை அமைச்சகம் நாக்பூரில் உள்ள ஜவஹர்லால் நேரு அலுமினியம் ஆராய்ச்சி வளர்ச்சி மற்றும் வடிவமைப்பு மையத்துடன் (JNARDOC - Jawaharlal Nehru Aluminium Research Development and Design Centre) இணைந்து "செம்மண்ணின்" திறனுள்ள பயன்பாடு மீதான ஒரு பயிலரங்கத்தை புது தில்லியில் ஒருங்கிணைத்தது.




- பாக்ஸைட் கழிவான செம்மண் என்பது அலுமினியத்தின் உற்பத்திச் செயல்பாடுகளின் போது உருவாகும் ஒரு திடக் கழிவாகும்.
- எரிசோடா மற்றும் இதர கனிமங்கள் போன்ற கழிவுகள் இதில் இருப்பதன் காரணமாக இது சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் என்று கருதப்படுகின்றது.

# மாநிலச் செய்திகள்

## மூங்கில் தொழிற்சாலைப் பூங்கா

- வடகிழக்குப் பிராந்தியத்தின் வளர்ச்சித் துறை அமைச்சர் ஜிதேந்திர சிங் (MoDoNER - Minister of Development of North Eastern Region) தனது துறையின் கீழ் பல்வேறு திட்டங்களின் செயல்பாடுகளை ஆய்வு செய்தார்.
- இவர் இந்தியாவின் முதலாவது மூங்கில் தொழிற்சாலைப் பூங்கா அசாமின் திமா ஹசோவ் மாவட்டத்தில் உள்ள மாண்டர்டிசாவில் அமைக்கப்படும் என்று அறிவித்தார்.
- மூங்கில் பூங்காவிற்கான மற்றொரு திட்டமானது அருணாச்சலப் பிரதேசத்தில் இடாநகரில் அமைக்கப் படவிருக்கின்றது.

# முக்கிய தினங்கள்

## ஆள் கடத்தலுக்கு எதிரான உலக தினம் – ஜூலை 30

- 2013 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது ஜூலை 30 ஆம் தேதியை ஆள் கடத்தலுக்கு எதிரான வருடாந்திர உலக தினமாகத் தேர்ந்தெடுத்துள்ளது.


- இத்தினமானது ஆள் கடத்தலினால் பாதிக்கப்பட்டவர்களின் நிலை குறித்தும் அவர்களது உரிமைகளின் பாதுகாப்பு மற்றும் அவர்களை ஊக்கப்படுத்துவது குறித்தும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.




- ஆள் கடத்தல் என்பது கட்டாயத் தொழிலாளர் முறை மற்றும் பாலினச் சுரண்டல் உள்ளிட்ட பல்வேறு நோக்கங்களுக்காக பெண்கள், குழந்தைகள் மற்றும் ஆண்களைக் கடத்துகின்ற ஒரு குற்றமாகும்.
- 2019 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "ஆள் கடத்தல் : உன்னுடைய அரசாங்கத்தை நடவடிக்கை எடுக்க குரல் கொடு" என்பதாகும்.

## உலக வனச் சரகர் தினம் – ஜூலை 31

- ஜூலை 31 அன்று உலகம் முழுவதும் உலக வனச் சரகர் தினம் அனுசரிக்கப்படுகின்றது.
- இது சர்வதேச வனச் சரகர் கூட்டமைப்பு நிறுவப்பட்ட நாளாகும். இது பூங்காக்கள் மற்றும் பாதுகாப்பகங்களின் முக்கியப் பாதுகாவலர்களாக "வனச் சரகர்களின்" வேலையை ஆதரிக்கும் ஒரு அமைப்பாகும்.



- இது 2007 அம் ஆண்டில் ஆரம்பிக்கப் பட்டது.
- வனச் சரகர்களின் துணிச்சலுக்கும் தைரியத்திற்கும் நன்றி தெரிவிப்பதற்காகவும் வனச் சேவையின் போது இறந்த வனச் சரகர்களின் தியாகத்தை நினைவில் கொள்வதற்காகவும் இத்தினம் அனுசரிக்கப்படுகின்றது.

--------------